
தொகுதி 1
சித்திரம் 3
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
நாடு
கடத்தல்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing

தொகுதி01
சித்திரம்-03

# நாடு கடத்தல்

அநாதையான குன்னுடையான் பங்காளின் கொடுமை தாங்காமல் ஊர்ஊராக ஓடினான். ஆனால் எங்கே சென்றாலும் கொடுமைகள் அவனை விடாமல் துரத்தியது. ஆனாலும் அந்த அநாதைச்சிறுவன் சிறிதும் அசரவில்லை. இறுதியாக தொலை தூரத்தில் தெரிந்த ஒரு சிறுகிராமத்தின் கோவில் கோபுரத்தை கண்ட அவனுக்கு மனதில் சிறு நம்பிக்கை பிறந்தது...




<u>மறுவர்ணணை</u>
பிரெண்டா பெக். இ கசாண்ரா கொர்நால்

<u>தமிழாக்கம்</u>
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

<u>சித்திரங்கள்</u>
ரவிசந்திரன & குழு

<u>வடிவமைப்பு</u>
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

<u>ஒப்பச்சர்</u>
முலர்விழி ராஜ்

<u>வெளியீட்டாளர்</u>
பொன்னிவளா பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.


சோழ மன்னர்...
கோலாத்தா கவுண்டரும் அவர் மனைவி அரியநாச்சியும் இப்போது உயிருடன் இல்லை.
அந்த அருமையான குடும்பம் பொன்னிவளநாட்டை சிறப்பாக ஆட்சி செய்து எனக்கும் உதவியாக இருந்தது.
கோலாத்தா அவன் குடும்பத்தை செல்வசெழிப்புடன் நடத்தி வந்தான். ஆனால்! இப்பொழுது அவர்களுடைய ஐந்து வயது மகனைத் தனியாக தவிக்க விட்டுச் சென்று விட்டனர்.
நான் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற என்னால் முடிந்ததைச் செய்வேன். ஆனால்! கோலாத்தாவின் பங்காளிகள்...
...அவர்கள் நிலத்தை அபகரிக்க நினைக்கிறார்கள். அந்த அனாதைக் குழந்தைக்கு ஆண்டவன் தான் கருணை காட்ட வேண்டும்.


தங்கவளநாட்டில் பங்காளிகள் ஒன்று கூடிப் பேசிக்கொண்டிருந்தனர்.
உனக்கு நம் முன்னோரின் கதை தெரியுமா?
பல வருடங்களுக்கு முன்பு சோழமன்னர் நம் அப்பாவின் அண்ணன் தம்பிகளுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்தார்.
அதில் ஒன்பது பேரின் மூத்தவரான கோலாத்தாவிற்கு பொன்னிவளநாடு கொடுக்கப்பட்டது. நம் தந்தையர்களுக்கு தங்கவளநாடு தரப்பட்டது.
அப்படி பிரித்து கொடுத்ததில் அநியாயம் நடந்துவிட்டது. பொன்னிவளநாடு மிகவும் செழிப்பானதாகும். ஆனால்! நம் நாட்டில் விளைச்சல் அவ்வளவு இல்லை.
கோலாத்தாவிற்கு நீண்டகாலமாக குழந்தையில்லை. பின்பு அவர்கள் ஒரு அநாதைக் குழந்தையை ஏழுஅடுக்கு கற்கலுக்கு அடியில் இருந்து எடுத்து அதை தங்கள் மகன் என்று சொந்தம் கொண்டாடினார்கள்.
கோலாத்தாவும் அவர் மனைவியும் எமனால் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டனர்.
இது நமக்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம் அந்தச் சிறுவனால் எதுவும் செய்ய முடியாது. நாம் அங்கே சென்று அந்த நிலத்தை அபகரித்துக் கொள்வோம். அந்த பூமியும் நமக்கு சொந்தமானது ஆகும்.



தங்கவளநாட்டு பங்காளிகள் பொன்னிவளநாட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.
அனைவரும் உள்ளே செல்ல வேண்டாம். சிலர் மட்டும் உள்ளே செல்வோம்
அந்தச் சிறுவனை நாம் பயமுறுத்த வேண்டாம். சிறிது நேரம் கழித்து நீங்கள் அனைவரும் உள்ளே வாருங்கள்.


யார் நீங்கள்?
நாங்கள் தங்கவளநாட்டு விவசாயிகள். எங்களது உரிமையை எடுத்துச் செல்ல வந்திருக்கிறோம்.
இந்த சிறுவன் அவனது பெற்றோரை இழந்தவன். இப்பொழுது அவர்களுக்கு காரியசடங்கு செய்து கொண்டிருக்கிறோம்.
ஒரு உண்மையை மறந்து விட்டீர்கள். இவன் எங்கள் பெரியப்பாவின் சொந்த மகன் கிடையாது.
உங்களது உரிமையைக் கேட்க இது நேரம் இல்லை.
சோழ மன்னர் இங்கே எந்த நேரத்திலும் வரலாம், அவரிடம் நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்.


மன்னர் வருகிறார்!
மங்களம் உண்டாகட்டும்.
தங்கவள நாட்டு விவசாயிகளே! எதற்காக இங்கே வந்துள்ளீர்கள்?
கோலத்தாவும், அரியநாச்சியும் இறந்துவிட்டனர். ஆகவே, எங்களுக்கு பொன்னிவள நாட்டை பிரித்து தாருங்கள்.
மன்னா! குன்னுடையான் எங்கள் பெரியப்பாவின் செந்தமகன் கிடையாது. அதனால் அவனுக்கு பொன்னிவளநாட்டில் உரிமையும் கிடையாது. அத்தோடு...
ஏய் பங்காளிகளே! இந்த சொத்தில் உங்களுக்கு உரிமை உள்ளது என்று நினைத்திருந்தால் முன்னமே வந்து பேச வேண்டியதுதானே!
இந்தச் சிறுவன் ஐந்து வருடமாக இந்த அரண்மனையில் இருக்கிறான், அவன் பெற்றோர் இறந்த இந்த நேரத்தில் எதற்கு வீண் கலகம் செய்கிறீர்கள்.



நாங்கள் அவனுக்கு உரிமையுள்ள உறவினர்கள், அவனை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.
என் முன்னே நின்று பேச உங்களுக்கு தகுதியே கிடையாது.
இந்த சிறுவனுடைய பொன்னிவளநாட்டைப் பங்கு போட உங்களுக்கு உரிமை கிடையாது.
எனக்கு தெரியும் இவனை நீங்கள் எப்படிப் பார்த்துக் கொள்வீர்கள் என்று உங்கள் மனதில் இந்த நிலத்தை அபகரிக்கும் எண்ணம் தான் உள்ளது.
இது அறுவடைக்காலம் இவனுக்கு அதைப் பராமரிக்கும் பக்குவம் கிடையாது.
ஆகவே நிலத்தையும், இவனையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.
சரியப்பா!
விளைச்சலில் ஒரு பகுதியை இப்பொழுது இவனுக்கு கொடுங்கள்.
அவன் வளர்ந்து பெரியவனானதும் பொன்னிவளநாட்டை திரும்ப அவனிடமே ஒப்படைத்து விட வேண்டும்.


சகோதரர்களே! சோழமன்னர் சொல்வதைக் கேட்டீர்களா?
குன்னுடையான் உயிருடன் இருந்தால் நிலத்தில் ஒரு பங்கை நாம் அவனுக்கு கொடுக்க வேண்டும்.
இந்த அரண்மனையை மீண்டும் பார்த்தால் அவனது பெற்றோரும் அங்கே நடந்ததும் அவனுக்கு ஞாபகம் வரும்.
அதனால்! அந்த அரண்மனையை இடித்து தரை மட்டம் ஆக்கி விடலாம்.




பங்காளிகள் அரண்மனையை இடித்து தரைமட்டமாக்கி, அது இருந்த இடம் தெரியாமல் செய்து விட்டனர்.





பங்காளிகள் அரண்மனை இருந்த இடத்தில் ஆமணக்கு விதைகளை தூவி முளைக்க வைத்தார்கள். பின் அந்தச் சிறுவனை யாருடன் வைத்துக் கொள்வது என்பதைப் பற்றி பேச விநாயகர் கோவிலில் ஒன்று கூடினார்கள்.
பெரிய வீட்டு அண்ணா! இந்தப் பையனை உங்கள் வீட்டிற்கு கூட்டிப்போங்கள், அதற்குப் பதிலாக அவன் பங்கை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.




யார் அந்த சிறுவனை வைத்துக் கொள்வது என்று பங்காளிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். இறுதியில் மூத்தவர் சிறுவனை பார்த்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.





இறுதியில் ஒரு முடிவுக்கு வந்த பங்காளிகள் அனைவரும் தங்கவளநாடு நோக்கி திரும்பிச் சென்றனர்.


யார் இந்தப் பையன்!
இவன் பொன்னிவளநாட்டில் உள்ள நம் பங்காளி கோலாத்தாவின் மகன் குன்னுடையான்!
இவனை சிறிது காலம் நம்முடன் வைத்திருப்போம், அவன் நம் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கட்டும்.
இவனை இங்கே வைத்து சாப்பாடு போட்டு நம் அரிசியைத் தீர்க்க வேண்டுமா?
அம்மா எனக்கு பசிக்கிறது!
இவனை நாம் வைத்துக்கொள்வதன் மூலம் இவன் பங்கு நமக்கு கிடைக்கும்.
அம்மா! எனக்கு பசிக்கிறது.
சரி! சரி! இவனுக்கு நான் பத்து நாட்களுக்கு மட்டும் தான் சாப்பாடு போடுவேன்.


அவனை சுற்றுத் திண்ணையில் அமர வைத்து ஏழு நாட்களுக்கு முன் காய்ச்சிய ராகிக் கூழை ஊற்றி "குடி" என்றாள்.
நாடோடிப் பயலே!
சுடுதண்ணீர் ஊற்றி சூடு பண்ணியிருக்கிறேன் குடிடா!
குடிடா! எதற்காக குடிக்காமல் காத்திருக்கிறாய். நீ பசியாக இருப்பதனால் தானே இதை உனக்கு குடிக்க கொடுத்தேன்.


ஓ... விஷ்ணு பகவானே! நான் எப்படி கஷ்டப்படுகிறேன் என்று பாருங்கள்.
நான் பால் சாதமும், பருப்பு குழம்பும் சாப்பிட்டு வளர்ந்தவன்.!
நாட்களும் நகர்ந்தன. அந்த பங்காளியின் மனைவி ஒரு நாளைக்கு காலை, மாலை இருவேளையும் உணவாக கஞ்சியை மட்டுமே அவனுக்கு குடிக்க கொடுத்தாள்.
இந்தப் பழங் கஞ்சியைக் குடிக்கும் படி என் தலையில் எழுதிவிட்டாயே!
இறுதியாக மூத்தபங்காளி அந்தப் பையனின் நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டு தன் சகோதரர்களிடம் பேச கூட்டத்தைக் கூட்டினார்.


தங்க வளநாட்டுப் பங்காளிகள் விநாயகர் கோவிலில் ஒன்று கூடினர். மீண்டும் அந்தச் சிறுவனை யார் பார்த்துக் கொள்வது என்று முடிவாகவில்லை.
இனிமேலும் என்னால் இந்தப் பையனை வைத்துக்கொள்ள முடியாது!
இந்தப் பையனை வேறு ஒருவரின் மனைவியிடம் விட்டாலும், இதே நிலமைதான் தொடரும்.
என் மனைவி ராகிக்கூழை கொடுத்தே இவனை கொன்று விடுவாள்.
பிச்சைப் பாத்திரத்தைக் கொடுத்து விரட்டி விடலாம். அவன் பத்து வீடுகளில் வாங்கிச் சாப்பிடட்டும்.
இவனை காலையில் நமது எல்லோருடைய மாடுகளையும் மேய்க்கச் சொல்வோம். அவன் மேய்த்து விட்டு மதியச் சாப்பாடு நம்மிடம் வாங்கி சாப்பிடட்டும்.
பின் இரவு இதுபோல் எல்லாரிடமும் பிச்சை எடுத்து உண்ணட்டும். இதன் மூலம் இரவு நேரச்சாப்பாடும் அவனுக்குக் கிடைத்து விடும்.
எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அவன் இரவு சாப்பிட்டவுடன் பள்ளிக்கூடத் திண்ணையில் படுத்து உறங்கட்டும்.
சிறுவன் குன்னுடையானின் அனுமதியைக் கூட கேட்காமல் இவர்களே முடிவெடுத்தார்கள்.


நாள், வாரம், மாதங்கள் பல கடந்தது. குன்னுடையான்
பள்ளிக்கூடத் திண்ணையில் படுத்துறங்கி, தினமும்
பங்காளிகளின் ஆடு, மாடுகளை மேய்த்து வந்தான்.
பங்காளிகளின் வீட்டைச் சுத்தம் செய்து விட்டு
பெரிய குடங்களில் தண்ணீர் சுமந்தான்.
தினமும் உணவிற்காக பிச்சை கேட்டு செல்லும்
பொழுது, அவனை அடித்து அவமானப்படுத்தினார்கள்.
உடல் மிகவும் இளைத்து
சோர்ந்து போனான்.

# நாடு கடத்தல்




ஐந்து வருடமாக இவர்கள் எனக்கு ராகிக் கூழையே தருகிறார்கள்!
நானும் பெரியவனாகிவிட்டேன் இங்கியிருந்து தப்பி சென்றுவிட்டால் என்ன?
ஐந்து வருடங்கள் ஆனது, குன்னுடையானுக்கு இப்பொழுது பத்து வயது. அவன் காட்டில் நடந்து செல்கையில் ஒரு யோசனை தோன்றியது!
இந்த மரம் மிகவும் காய்ந்து போய் இருக்கிறதே. இதை நான் வெட்டி விற்றால் என்ன?
நான் கடவுளின் குழந்தை என்பது உண்மையானால், இந்த விறகு எல்லாம் ஒடிந்து கீழே விழவேண்டும்.
ம்ம்ம்.......
குன்னுடையானுக்கு என் உதவி தேவைப்படுகிறது!


விஷ்ணு தன் சக்தியால் காய்ந்த மரத்தை வெட்டிக் கீழே போட்டார். குன்னுடையான் கீழே விழுந்த விறகை எடுத்து ஒரு பெரிய கட்டாய் கட்டிக் கொண்டான்.
சடசடக்க்




குன்னுடையான் அந்த விறகைத் தலையில் வைத்து நடந்து சென்றான். அவன் வஞ்சகம் பிடித்த பங்காளிகளின் தங்கவளநாட்டை விட்டு உணவைத் தேடியும், அவன் மேல் பரிவு காட்டும் குடும்பத்தை தேடியும் கிளம்பினான்.

நடந்து செல்லும் போது "இந்த விறகை கிராமத்தில் யாராவது வாங்க மாட்டார்களா" என்று நினைத்துக் கொண்டே....







ஏனப்பா தம்பி!
தம்பி! இந்த விறகெல்லாம் விற்பனைக்கா? என்ன விலைன்னா தருவாய்?
அம்மா! நான் ஐந்து வருடமாக குழம்பும் சாதமும் சாப்பிட்டதில்லை!
நீங்கள் குழம்பும் சாதமும் போட்டால் எல்லா விறகையும் உங்களுக்கே தருகிறேன்.
சரி! நான் உனக்கு சாப்பாடு போடுகிறேன்.
மகா விஷ்ணு!
ஐந்து வருடத்திற்குப்பின் அருமையான குழம்பும் சாதமும் நான் சாப்பிடப் போகிறேன்!











குன்னுடையானுக்கு உணவு கொடுப்பதைப் பார்த்த அந்தப் பெண்ணின் கணவன் கோபம் கொண்டு அவனுக்கு கொடுத்த குழம்புச்சாதத்தை ஒரே எட்டில் தட்டி விட்டான். இதைக் கண்ட குன்னுடையான் பயத்தில் மீண்டும் காட்டை நோக்கி ஓடினான்.






அந்தச் சிறுவன் வடக்கு நோக்கி காட்டுக்குள் நீண்ட தூரம் ஓடிக் கொண்டே இருந்தான்.
நீண்டநேரம் ஓடிய களைப்பினால், அவனுக்கு தாகம் ஏற்பட்டது. அதனால், அருகில் இருந்த குளம் ஒன்றில் தண்ணீர் குடித்து, முகம் கழுவினான்.


இறுதியாக குன்னுடையான் அருகில் இருந்த ஒரு கிராமத்திற்குள் நுழைந்தான்.
ஏப்பா! சற்று முன் ஒரு பையன் இந்த வீதியில் ஓடுவதைப் பார்த்தேன்...
அவனைப் பிடித்து இங்கே கொண்டு வா!
சிறுவனே நில்!
இந்த ஊரின் பெரிய கவுண்டர் உன்னை அழைத்து வரச் சொன்னார்.
குன்னுடையான் அந்தக் காவலாளி தடுக்கும் வரை ஓடிக்கொண்டே இருந்தான்.
என்னுடன் வா! அவர் விநாயகர் கோவிலில் அமர்ந்திருக்கிறார்.



யாரப்பா நீ? எங்கேயிருந்து வருகிறாய்?
என் பெயர் குன்னுடையாக் கவுண்டர்!
அய்யா! நான் பொன்னிவளநாட்டிலிருந்து வருகிறேன். என் தந்தை ஒரு விவசாயி. என் பெற்றோர்கள் இறந்துவிட்டதால், என் பூமியை பங்காளிகள் அபகரித்துக் கொண்டனர்.
ஐந்து வருடங்களாக என்னை மாடு மேய்க்கச் சொல்லி, எனக்கு ராகிக் கூழை மட்டுமே உணவாக கொடுத்தார்கள்.
நான் குழம்பும் சாதமும் சாப்பிட்டதே இல்லை. இப்போது மிகவும் பசியாக இருக்கிறேன்.
என்னுடன் வா நான் குழம்புசாதம் வேண்டும் அளவு போடுகிறேன்.
குழம்புசாதம் கொடுத்தால் நீங்கள் சொல்லும் வேலைகளை செய்கிறேன்.
சரி! நல்லது. என்னுடன் வா! என் நிலத்தைப் பார்த்துவிட்டு பிறகு வீட்டிற்குச் செல்வோம்.


பசங்களா! இந்தப் பையன் விவசாயி மகன். இவன் பொன்னிவள நாட்டில் இருந்து வருகிறான்.
இவனது பெற்றோர்கள் இறந்துவிட்டதால், இவன் நிலத்தை பங்காளிகள் அபகரித்துக் கொண்டனராம்.
இவனை மாடு மேய்க்கச் சொல்லி, வெறும் ராகிக்கூழை மட்டும் சாப்பிடக் கொடுத்திருக்கிறார்கள்.
அதனால் இங்கே ஓடிவந்து விட்டான்.
இவனை நம்முடன் வைத்துக் கொள்வோம். நம் மாடுகளை மேய்க்கட்டும். பிறகு, வீட்டில் ஏதாவது வேலை இருந்தால் செய்யட்டும்.
அப்பா! இவனைக் கூட்டிப் போக எங்களுக்கு ஒன்றும் தடையில்லை.
நம் அம்மாவின் குணம் தெரியுந்தானே? இவனுக்கு சாப்பாடு போட ஒத்துக் கொள்ளமாட்டார்கள்.
எதுவென்றாலும் பரவாயில்லை, இவனை இங்கே வேலை செய்யச் சொல்வோம். மதியச்சாப்பாட்டிற்கு நாம் வீட்டிற்குக் கூட்டிச் செல்லலாம்.



மாடுகளை மேய்க்கும் இடத்தை அவனுக்கு காட்டு.
மாடுகளை மேய்க்கும் பொழுதே, வீட்டிற்கு விறகுகளை பொறுக்கி வரட்டும்.
பெரிய கவுண்டர் விறகு வெட்ட அவனிடம் அரிவாளைக் கொடுத்தார். எங்கே மரம் அதிகமாக வளர்ந்துள்ளதோ, அங்கே சென்று
என்ன? மரங்கள் இப்படி வளர்ந்துள்ளதே! இதை நான் எப்படி வெட்டுவது?.
ஓ... விஷ்ணு!
நான் கடவுளின் குழந்தை என்பது உணமையானால்!
ஒரே வெட்டில் இந்த கிளைகள் அனைத்தும் கீழே விழ வேண்டும்!


விஷ்க்விஷ்க்,,,
விஷ்ணு குன்னுடையானின் குரலைக்கேட்டு உடனே தன் சக்தியைப்பயன்படுத்தி அவனுக்கு உதவினார்.
இந்தப் பையனுக்கு தினமும் வேலை தரவேண்டும்.
ஒரு நாளைக்கு ஐம்பது பேர் செய்யும் வேலையை ஒருத்தனே செய்துவிட்டான்.
அவன் வேலை செய்யும் வேகத்தை பாருங்கள் அவனை நாம் விட்டுவிடக் கூடாது.


ஏனப்பா!
யார் இந்த சிறுவன்?
அவர்கள் குன்னுடையானை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால்! அவரது மனைவி சிறுவனை கண்டதும் கோபப்பட்டாள்.
நம் பசங்களுக்கு சாதம் போடும் போது, இந்தப் பையனுக்கும் சேர்த்து போடு. அவர்கள் சாப்பிட்டு முடித்ததும். அவன் கதையை உனக்குச் சொல்கிறேன்.
அம்மா! இப்பொழுது உங்களுக்கு மூன்று மகன்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.
இவனுக்கு நல்ல சாப்பாடு போடுங்கள். இவன் எவ்வளவு விறகுகளை வெட்டினான் என்று சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்.
பசங்களே! நான் அவனுக்கு சாதம் போடுகிறேன். நீங்கள் இருவரும் குளித்து விட்டு வாருங்கள்.


மகன்கள் குளிக்கச் சென்றதும், கோபம் கொண்ட அந்தப் பெண் குன்னுடையானை இழுத்துக் கொண்டு போய் சுவற்றின் ஓரத்தில் தள்ளினாள்.
ஏய் அநாதை பயலே! இங்கே வா!
ஆ...
ஏய்!
இந்தா! இதை சீக்கிரம் குடி?
அந்தப் பெண் மறுபடியும் அவனுக்கு ராகிக் கூழையே உணவாக கொடுத்தாள். இதை அவளுக்கு அறியாமல், மூத்த மகன் பார்த்துக் கொண்டிருந்தான்.


அம்மா! நான் உங்களிடம் என்ன சொன்னேன்?
நான் சொன்னதை ஏன் கேட்கவில்லை?
ஐய்யோ! கடவுளே! சிவனே!
மகன் தாயுடன் சண்டை பிடித்தான். அதை பார்த்த குன்னுடையான் பயத்தில் ஓட தொடங்கினான்.
சரியான முரடன்!
இன்று தாயை அடிக்கிறான், நாளை ஒருவேளை என்னையும் அடிப்பான். நான் இங்கே இனி மேல் இருக்கக்கூடாது.


குன்னுடையான் திக்குதிசை இன்றி நீண்டநேரம் ஓடினான். இறுதியாக களைப்படைந்து ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து தன் நிலையை எண்ணி மிகவும் வேதணை அடைந்தான். பசியும் பயமும்அவனை ஆட்கொண்டது.
கடவுளே! நான் இன்னும் எத்தனை நாள் இப்படியே வாழ வேண்டும். எனக்குப் பசிக்கிறது, மிகவும் களைப்பாக இருக்கிறது எனக்கு யாரும் இல்லை. என்னைக் காப்பாற்ற ஏதாவது செய்யுங்கள்.
அடுத்து குன்னுடையானுக்கு என்ன நடக்கும்? இந்த சோக நிலை மாறுமா? பசியால் வாடும் அந்த அனாதை சிறுவனுக்கு ஒரு இருப்பிடம் கிடைக்குமா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic3tamil





வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!




01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-44-3

© 2012 Ponnivala Publishing